RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-4 இதழ்- 284 அக்டோபர்.15 2025 புதன்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

## இதுவரை 75 தொகுதிகளில் மினி ஸ்டேடியம்: முதல்வர் ஸ்டாலின் தகவல்



சென்னை: அக்.15-

“எளியவர்களின் வெற்றிதான் நமது அரசின் வெற்றி. எத்தனையோ ஏழை வீரர்களின் கனவை விளையாட்டுத் துறை நனவாக்கி வருகிறது. எந்த மாநில அரசும் செய்யாத அளவுக்கு விளையாட்டு வீரர்களுக்கு உதவி செய்துள்ளோம்” என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் கோப்பை போட்டிகள் நிறைவு விழா இன்று சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடந்தது. அந்நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த நிகழ்வு குறித்து முதல்வர் ஸ்டாலின் கூறும்போது, “தமிழகத்துக்கு பெருமை சேர்க்கும் வகையில் செயல்பட்டு வரும் அனைவருக்கும் வாழ்த்துகள். திறமையான இளைஞர்களை அடையாளம் காண உழைக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துகள். 4 ஆண்டுகளில் தமிழகம் எப்படிப்பட்ட உயரங்களை அடைந்துள்ளது என்பது உங்களுக்கு தெரியும்.

அதிமுக ஆட்சியின் 5 ஆண்டுகளில் விளையாட்டுத் துறை உட்கட்டமைப்புக்கு ரூ.170.31 கோடி ஒதுக்கினார்கள். கடந்த 4 ஆண்டு திமுக ஆட்சியில் உட்கட்டமைப்புக்கு மட்டும் ரூ.601.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். விளையாட்டுத் துறைக்கு மொத்தமாக ரூ.1,945.07 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். அதனால் தான் தமிழ்நாடு விளையாட்டு துறையின் பொற்காலமாக திராவிட மாடல் ஆட்சி உள்ளது. பொருளாதாரத்தில் எந்த மாநிலமும் சாதிக்காத இரட்டை இலக்க வளர்ச்சியை நாம் எட்டியுள்ளோம். இளைஞர்களின் நலனையும், விளையாட்டுத் துறையையும் 'The Young and Energetic Minister'-யிடம் ஒப்படைத்தால் அது எப்படி வெற்றிகரமாக அமையும் என்பதற்கு தமிழ்நாடு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

தேசிய, பன்னாட்டு விளையாட்டு போட்டிகளில் சாதித்த 5,393 வீரர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் மினி ஸ்டேடியம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 75 தொகுதிகளில் மினி ஸ்டேடியம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழகம் போல் வேறு எந்த மாநிலத்திலும் விளையாட்டு வீரர்களுக்கு இதுபோன்ற உதவி கிடைப்பதில்லை.

எளியவர்களின் வெற்றிதான் நமது அரசின் வெற்றி. எத்தனையோ ஏழை வீரர்களின் கனவை விளையாட்டுத் துறை நனவாக்கி வருகிறது. உங்களுக்கான அத்தனை வாய்ப்புகளையும் உருவாக்குகிறோம். விளையாட்டில் கவனம் செலுத்தி, வெற்றி பெற்று தமிழ் நாட்டுக்கும், இந்தியாவுக்கும் பெருமை தேடித் தாருங்கள்” என்றார்.

## தமிழக மின்வாரிய ஊழியர்களுக்கு ரூ.16,800 வரை போனஸ்




சென்னை: அக்.15-

தமிழக மின்வாரிய ஊழியர்களுக்கு ரூ.16,800 வரை தீபாவளி போனஸ் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மின்வாரியம் பிறப்பித்த உத்தரவின் விவரம்: அரசு ஊழியர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவன பணியாளர்களுக்கு 20 சதவீதம் தீபாவளி போனஸ் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில், தமிழக மின்வாரியத்தில் உள்ள நிறுவனங்கள் மின் பகிர்மான, உற்பத்தி, பசுமை எரிசக்தி, தொடரைப்பு கழகம் ஆகியவற்றில் பணியாற்றும் முழுநேர ஊழியர்களுக்கும், பயிற்சியில் உள்ள கள உதவியாளர், கணக்கீட்டாளர், கேங்மேன், அலுவலக உதவியாளர்களுக்கும், முழுநேர மற்றும் பகுதிநேர தூய்மை பணியாளர்களுக்கும் 2024 25ம் நிதியாண்டில் முழுமையாக பணியாற்றி இருந்தால் போனஸ் வழங்கப்படும்.

மின்வாரிய பணியாளர்களுக்கு 8.33 சதவீதம் போனஸ், 11.67 சதவீதம் கருணைத்தொகை வழங்கப்படும். அதில் போனஸ் தொகை அதிகபட்சமாக ரூ.6,997ம், கருணைத்தொகை ரூ.9,803ம் என மொத்தம் ரூ.16,800 வரை போனஸாக வழங்கப்படும்.

மேலும் ஓய்வுபெற்ற ஊழியர்கள், பதவி உயர்வு பெற்றவர்கள், இடைநீக்கம் செய்யப்பட்டவர்கள் 2024 25 காலத்தில் பணியில் இருந்தால் அவர்களுக்கும் இந்த போனஸ் வழங்கப்படும். அக்.15 க்குள் (இன்று) அனைத்து ஊழியர்களுக்கும் போனஸ் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




### மதுரை அலங்காநல்லூர் அருகே புதிதாக வரும்

## தனியார் மதுபான கடை எதிர்ப்பு தெரிவித்து 100க்கும் மேற்பட்ட வி.சி.கவினர் ஆர்ப்பாட்டம்

மதுரை, அக்.15

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே அலங்காநல்லூர் மதுரை சாலையில் குமாரம் பகுதியில் புதிதாக மதுபான கடை வருவதாக கூறி அதற்கு எதிர்ப்பு தெரிவித்து 50க்கும் மேற்பட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் சாலை ஒரேத்தில் கட்டப்பட்டு வரும் மதுபான கடையின் முன் நின்று ஆர்ப்பட்டம் நடத்தினர்.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக இந்த பகுதியில் மது பான கூடங்கள் செயல்படுவதற்கு பல்வேறு எதிர்ப்புகள் தொடர்ந்து நிலையில் அலங்காநல்லூர் பகுதியில் மதுபான கடைகள் முற்றிலுமாக செயல்படகூடாது என எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர் அதை தொடந்து இந்தப் பகுதியில் எந்த ஒரு மதுபான கூடங்களும் செயல்படவில்லை மேலும் இந்தப் பகுதியில் அரசு மதுபான கூடம் மற்றும் எலைட் பார்கள் இந்தப் பகுதிக்கு வரக்கூடாது என அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது மேலும்

இந்த பகுதியில் புதிய மதுபான கடை வருவதால் அதிக அளவு விபத்து ஏற்படும் மேலும் பள்ளி குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பாதுப்பு இருக்காது என கூறி மதுபான கடைக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன கோசங்கள் எழுப்பி பெண்கள் உட்பட சுமார் 100க்கும் மேற்பட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் தகவல் அறிந்த அலங்காநல்லூர் காவல்துறையினர் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர் பின்னர் களைந்து சென்றனர்.

திடீரென புதிதாக கட்டப்பட்டு வரும் தனியார் மதுபான கடை முன் நின்று எதிர்ப்பு தெரிவித்து விசிகவினர் ஆர்ப்பாட்டம் நடத்தியதால் அப்பகுதி பரபரப்பு ஏற்பட்டது

## மதுரையில் காணாமல் போன அழகிரி... கரூரும் விரைவில் சுத்தம் செய்யப்படும் - ஆதவ் அர்ஜுனா

கரூர், அக்.15-

கரூரில் சம்பவத்துக்கு பிறகு நாங்கள் ஓடிவிட்டோம் என்றார்கள். நாங்கள் ஓடவில்லை. காவல்துறை தான் எங்களை திரும்பி வரவேண்டாம் என்றார்கள் என்றும், கரூர் விவகாரத்தின் மூலம் தவெகவை முடக்க திமுக முயற்சி செய்ததாகவும், ஆதவ் அர்ஜுனா குற்றம்சாட்டி உள்ளார்.

கரூர் துயர சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்ட உச்ச நீதிமன்ற தீர்ப்பை தொடர்ந்து டெல்லியில் செய்தியாளர்களிடம் தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா நேற்று முன்தினம் கூறியதாவது: தவெக தலைவர் விஜய்யின் சுற்றுப்பயணத்துக்கு, எந்த மாவட்டத்திலும் காவல்துறை பெரிதாக ஆதரவு தந்தது கிடையாது. ஆனால், அரியலூர், பெரம்பலூரில் காவல்துறை ஆதரவு தந்தார்கள். பெரம்பலூரில் எஸ்.பி எங்களுக்கு முன்னெச்சரிக்கையாக பல தகவல்களை கொடுத்தார். அதனால், தான் கடைசி நேரத்தில் பெரம்பலூர் பயணத்தை ரத்து செய்ய முடிந்தது. ஆனால், கரூர் காவல்துறை, முன்னாள் அமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

நாங்கள் காவல்துறை சொன்ன நேரத்துக்குள், அதாவது மதியம் 3 முதல் இரவு 10 மணிக்குள் அவர்கள் அனுமதி தந்த இடத்துக்கு சென்றுவிட்டோம். கரூருக்குள் நாங்கள் நுழையும் போது, காவல் துறை தான் எங்களை வரவேற்றார்கள். அவர்கள் தான் எங்களை திட்டமிட்ட இடத்துக்கு அழைத்து சென்று, பிரச்சாரம் செய்ய வைத்தார்கள். இது வேறு எந்த மாவட்டத்திலும் நடக்கவில்லை. கரூரில் மட்டுமே நடந்தது.

தவறுகள் எங்கள் மீது இருந்திருந்தால், கரூர் மாவட்ட எல்லையிலேயே காவல்துறை ஏன் எங்களை வரவேற்க வேண்டும்? மேலும், இந்த இடத்தை காவல்துறை தான் எங்களுக்கு வலுக்கட்டாயமாக ஒதுக்கினார்கள். அதற்கான ஆதாரத்தை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியிடம் கொடுப்போம். எங்களுக்கு தமிழக அரசின் மீது, தமிழக அரசின் விசாரணை அமைப்பின் மீதும் நம்பிக்கை இல்லை. ஏனென்றால், இந்த



சம்பவத்துக்கு பிறகு, நாங்கள் அனைவரும் ஓடிவிட்டோம் என்றார்கள். உண்மையில் நாங்கள் ஓடவில்லை.

எங்களது செல்போன் சிக்னலை வேண்டுமானாலும் ஆய்வு செய்யுங்கள். விஜய்யை அனுப்பிவிட்டு, நாங்கள் கரூர் மாவட்ட எல்லையில் தான் இரவு முழுக்க காத்திருந்தோம். காவல்துறை தான் எங்களை சம்பவ இடத்துக்கு வர வேண்டாம் என வலியுறுத்தினார்கள். நாங்கள் உள்ளே வந்தால், கலவரம் வரும், பிரச்சினை வரும் என சொல்லி, காவல்துறை எங்களை தடுத்துவிட்டது. பின்னர் திட்டமிட்டு, தவெக நிர்வாகிகள் மீது தடியடி நடத்தினார்கள். தீவிரவாதிகளை போல எங்களை சித்தரித்தார்கள். இது தொடர்பாகவும் நீதிமன்றத்தில் பதிவு செய்வோம்.

இத்தனை உயிரிழப்புகளை கண்டு அடுத்த 4 நாட்கள் என்ன செய்வதென்றே எங்களுக்கு தெரியவில்லை. இந்த சந்தர்ப்பத்தை திமுக பயன்படுத்தி என்னென்னமோ நாடகமாடினார்கள். அடுத்த ஒரு வாரம் நீதிமன்றம் விடுமுறை. இதனால், எங்களால் சட்டம் ரீதியாகவும் முறையிட முடியவில்லை. உண்மையில் என்ன நடந்தது என யாராவது பேட்டி கொடுத்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தனர். இந்த பிரச்சினையை வைத்து ஒட்டு மொத்த கட்சியையும் முடக்க திமுக முயற்சித்தது.

மேலும், அருணா ஜெகதீசன் ஆணையம் விசாரணை நடக்கும்போதே, தலைமைச் செயலாளர், சுகாதாரச் செயலாளர் செய்தியாளர்களைச் சந்தித்தது ஏன்? கட்சியை முடக்கக்கூடிய ஒரு ஜனநாயக படுகொலையையும், அவசர நிலையையும் சட்ட ஒழுங்கு மூலம் உருவாக்கியிருக்கிறார்கள். ஓய்வு பெற்ற நீதிபதி கண்காணிப்பில் சிபிஐ விசாரணை நடக்கும் போது, மாநில அரசும் இந்த விசாரணையை தொடர்ந்தால், தவெக மட்டுமே இந்த விவகாரத்தில் தவறு செய்தது என்ற ஒரு அரசியலை திமுக உருவாக்கும். கரூர் காவல்துறை முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஒரு காலத்தில் மதுரைக்குள் சென்றால், காலை வெட்டுவோம் என்பார்கள்.. மதுரை எங்க கோட்டை என்று ரவுடித்தன அரசியல் செய்வார்கள். ஆனால் இன்று அழகிரி அண்ணன் அரசியலிலேயே இல்லை. அந்த மாதிரி கரூர் விரைவில் சுத்தம் செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## ரயிலில் பட்டாசு எடுத்துச் சென்றால் 6 மாதம் சிறை தண்டனை

சென்னை, அக்.15-

தீபாவளிப் பண்டிகை நெருங்கும் நிலையில், ரயிலில் பட்டாசு எடுத்துச் சென்றால், 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று ரயில்வே நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தீபாவளிப் பண்டிகை வரும் 20ம் தேதி கொண்டாடப்படு கிறது. பண்டிகையை ஒட்டி சொந்த ஊர்களுக்கு செல் லும்போது, பேருந்து, ரயில் களில் பட்டாசுகளை எடுத் துச் செல்ல முயற்சி செய் வார்கள். குறிப்பாக, ரயில் களில் பட்டாசுகள் எடுத்துச் செல்வதைத் தடுக்க ஆர் பிஎஃப் போலீஸார் தீவிர சோதனையில் ஈடுபடுவது வழக்கம். அந்த வகையில், தீபாவளிப் பண்டிகையை ஒட்டி, ரயிலில் பட்டாசுகளை எடுத்துச்செல்வதை தடுக்க தீவிர சோதனை விரை வில் தொடங்க உள்ளது. ரயிலில் பட்டாசு எடுத்துச் செல்வது கண்டுபிடிக்கப் பட்டால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆர் பிஎஃப் போலீஸார் எச் சரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து, ஆர்பிஎஃப் அதிகாரிகள் கூறியதாவது: ரயில்களில் பட்டாசு உள் ளிட்ட தீவிபத்து ஏற் படுத்தும் பொருட்களை கொண்டு செல்லத் தடை உள்ளது. சிலர் பண்டிகைக் காலங்களில் விதிமுறை களை மீறி பட்டாசு போன்ற பொருட்களை எடுத்து வருகின்றனர். இதனால் பயணிகளின் பாதுகாப்பு கேள்விக் குறியாகிறது. எனவே தடையை மீறி பட் டாசு கொண்டு செல்பவர் கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். முதல் முறையாகப் பிடிபட்டால் ரூ.1,000 அபராதம் அல் லது 6 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கப்படும். தொடர்ந்து விதிமீறல்களில் ஈடுபட்டால் 3 ஆண்டுகள் வரையில் சிறைத் தண் டனை அல்லது ரூ.5 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தீபாவளியை பாதுகாப்பாக கொண்டாடவும்: மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை அறிவுறுத்தல்

சென்னை, அக்.15-

தீபாவளி பண்டிகை வரும் 20ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இந்த நாளில் பள்ளி மாணவர் கள் பாதுகாப்பாக தீபாவளி பண் டிகையை கொண்டாடுவது குறித் து, பள்ளிக் கல்வித் துறை சார்பில் ஆண்டுதோறும் அறிவுரை வழங் கப்பட்டு வருகிறது. அதன்படி, நடப்பாண்டும் மாணவர்கள் விபத் தில்லா தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகை யில், பல்வேறு அறிவுரைகளை பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் வழங்கியுள்ளார்.



அதன் விவரம் வருமாறு: தீபாவளி பண்டிகை நாளில் மக்கள் கவனக் குறைவாக பட்டாசு வெடிப் பதால் தீ விபத்து ஏற்படலாம். இது தவிர, உயிர்சேதம், பொருள் சேதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், குழந்தைகளுக்கு தீக் காயங்களும், சில நேரங்களில் பார்வை இழப்பும் ஏற்படக் கூடும். இத்தகைய நிகழ்வுகளை தவிர்ப் பதும், தடுப்பதும் நமது கடமை யாகும். எனவே, பள்ளி மாணவர் களுக்கு தீபாவளி பண்டிகையை பாதுகாப்பாக கொண்டாட விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதன்படி, பட்டாசுகளை கொளுத்தும் போது தளர்வான ஆடைகள், எளிதில் பற்றக்கூடிய ஆடைகளை அணியக் கூடாது. பட் டாசு வெடிக்கும் போது அருகே ஒரு வாளி தண்ணீர் வைத்துக் கொள்ள வேண்டும். கையில் வைத்து பட்டாசுகளை வெடிக் கக் கூடாது. அதேபோல், கூட் டமான இடங்கள், தெருக்கள், சாலைகளில் வெடிக்க வேண்டாம். பெற்றோர் முன்பு பிள்ளைகள் பட் டாசுகளை வெடிக்க வேண்டும்.

விலங்குகளை துன்புறுத்தும் வகையில் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது. வெடிக்காத பட்டாசுகளை பரிசோதிப்பதை தவிர்க்க வேண் டும். மேலும், இரவு 10 முதல் காலை 6 மணி வரை பட்டாசுகளை வெடிக்கக் கூடாது என்பது உட்பட பல்வேறு அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன. இந்த தகவல்களை பள்ளி மாணவர்களுக்கு தெரிவித்து ஆசிரியர்கள் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரியின் 25வது பட்டமளிப்பு விழா

கோவை, அக்.15-

கோவை காளப்பட்டி பகுதியில் இயங்கி வரும் டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரியின் 25வது பட்டமளிப்பு விழா கோவை மருத்துவ மையம் ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் நல்லா பழனிசாமி தலைமையில் கல்லூரியின் செயலர் மருத்துவர் தவமணி தேவி பழனிச்சாமி, கோவை மருத்துவமனை ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் மருத்துவர் அருண் பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் என்.ஜி.பி. கலையரங்கில் நடைபெற்றது. இதில் கல்லூரியின் முதல்வர் முனைவர் சூ சரவணன் பட்டமளிப்பு உறுதிமொழியை வழங்கினார். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக இந்திய வருமான வரித்துறை ஆணையர் நந்தகுமார் ஐ.ஆர் எஸ் பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கி, கல்வியின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.

மொத்தம் 1,992 மாணவர்கள் (இளங்கலை 1,479, முதுகலை 431) பட்டம் பெற்றனர். இதில் பல்கலைக்கழக தரவரிசையில் முதலிடம் பெற்ற 82 மாணவர்களும் பட்டம் பெற்றனர்.மேலும் இந்நிகழ்வில், டாக்டர் என்.ஜி.பி ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் முதன்மைச் செயல் அதிகாரி முனைவர் ஓ.டி.புவனேஷ்வரன், முதன்மைச் செயல் இயக்குநர் மா. நடேசன், என்.ஜி.பி. கல்விக் குழுமங்களின் கல்விசார் இயக்குனர் முனைவர் பெ.இரா.முத்துசாமி, புல முதன்மையர்கள் மற்றும் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவினைச் சிறப்பித்தனர். பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட 5,11,12 ஆகிய வார்டுகளில் வட்ட கழக செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது

பம்மல், அக்.15-

செங்கல்பட்டு மாவட்டம் பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட 5,11,12 ஆகிய வார்டுகளில் வட்ட கழக செயலாளர்கள் ஏ.அனிஸ்டன், எம்.சாலா, பி.ஸ்ரீதர் தலைமையில் பிஎல்ஏ2, பிஎல்சி, பிடிஏ நிர்வாகிகளுக்கு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பம்மல் தெற்கு பகுதி செயலாளர், தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் வே.கருணாநிதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆலோசனை வழங்கி னார்கள். இக்கூட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் அமைப்




பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கல்குளம் வட்டத்திற்குட்பட்ட நியாயவிலைக்கடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா திடீர் ஆய்வு

கன்னியாகுமரி, அக்.15-

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டத்திற்குட்பட்ட குளச்சல், நெய்யூர் நியாயவிலைக்கடைகள் மற்றும் உடையார்விளை உணவு கிட்டங்கியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, திடீர் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் நெய்யூர் பகுதியில் அமைந்துள்ள அமுதம் நியாயவிலைக்கடை நேரில் ஆய்வு மேற்கொள்ள ப்பட்டது. அங்கு பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களான அரசி, பாமாயில், சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட பொருட்களின் இருப்புகள் மற்றும் பொருட்களின் தரம் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் நியாயவிலைக்கடைக்கு வருகைப்புரிந்த பொதுமக்களிடம் கலந்துரையாடி குறைகள் கேட்டறியப்பட்டது.



மேலும் நியாயவிலைக்கடையின் குடும்ப அட்டைத்தாரர்களின் எண்ணிக்கை கேட்டறியப்பட்டது. குடும்ப அட்டைத்தாரர்கள் விரல் ரேகை பதிவு செய்வது நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தீபாவளிக்கு முன்பாக அனைத்து குடும்ப அட்டைத்தாரர்களுக்கும் ரேசன்பொருட்கள் வழங்க பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து உடையார் விளை உணவு கிட்டங்கி இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கிட்டங்கியின் கீழ் செயல்படும் நியாயவிலைக் கடைகளில் உள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்குகேற்ப ஒரு மாத பொருட்களான அரிசி, சீனி, பருப்பு, பாமாயில் உள்ளிட்ட உணவு தானியங்கள் ஒதுக்கீடு செய்து சரியான எடைகளில் நியாயவிலைக்கடைகளுக்கு அனுப்பி வைக்க துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் இருப்பு வைக்கப்பட்டுள்ள உணவு தானியங்களின் தரம் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் இருப்பு பதிவேடுகள், ஊழியர்களின் வருகைப்பதிவேடு, கிட்டங்கியின் அடிப்படை வசதிகள் உள்ளிட்டவைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ப ட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

# வேட்டங்குடி பறவைகள் சரணாலயத்தில் மாபெரும் பனை விதைகள் நடும் திட்ட துவக்க விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி பனை விதைகள் நடும் பணியினை துவக்கி வைத்தார்

சிவகங்கை, அக்.15-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், மேலையூர் ஊராட்சிக்குட்பட்ட வேட்டங்குடி பறவைகள் சரணாலயத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பு, இந்திய செஞ்சிலுவை சங்கம் ஆகியவைகள் இணைந்து நடத்திய மாபெரும் பனை விதைகள் நடும் திட்ட துவக்க விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி பனை விதைகள் நடும் பணியினை துவக்கி வைத்து தெரிவிக்கையில்,





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர் மேலாண்மையை பாதுகாக்கும் வகையில் பல்வேறுத் திட்டங்களை வழங்கி வருவதுடன், விவசாயிகளின் தேவையை உணர்ந்து நிறைவேற்றும் வகையில் தனி நிதி நிலை அறிக்கையுடன் கூடிய பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இன்றையக்காலக் கட்டத்தில் 70 சதவிகிதம் விவசாயமே பிரதானமாக இருந்து வரும் இந்நிலையில் இவற்றை எந்த அளவிற்கு உயர்த்த வேண்டுமோ அந்த அளவிற்கு பல்வேறு திட்டங்களை வழங்கி விவசாயிகளின் முன்னேற்றத்தினை இலக்காக கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். அதன்மூலம் உணவு உற்பத்தியை அதிகப்படுத்தி மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு, தமிழக அரசின் திட்டங்கள் அடிப்படையாக விளங்கி வருகிறது.

மேலும், பசுமையான தமிழகத்தினை உருவாக்கிட வேண்டும் என்ற அடிப்படையிலும், தமிழகம் முழுவதும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருவதுடன், மீண்டும் பனைமரங்கள் அதிக அளவு வளர்த்து நீர்நிலை ஆதாரங்களை பாதுகாத்திடும் வகையிலும், பழமைவாய்ந்த சிறப்புக்களின் ஒன்றான பனைமரங்கள் வருங்காலத்தில் இளைஞர் சமுதாயத்தால் பாதுகாக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

இதன் நோக்கம், பாரம்பரியம் வாய்ந்த பனைமரம் வளர்ப்பது மட்டுமன்றி, இதன்மூலம் நீர்நிலை ஆதாரங்கள் பாதுகாக்கப்படுகின்றன. குறிப்பாக கண்மாய்கள், ஏரிகள், குளங்கள் போன்றப் பகுதிகளின் கரையோரங்களிலும் மற்றும் சாலை ஓரப்பகுதிகளிலும் பனைவிதைகள் நடவு செய்து பனைமரங்கள் வளர்க்கும் பொழுது, விவசாயிகளின் நண்பனாக இருந்து நீர்நிலை ஆதாரங்கள் பாதுகாக்கும் வகையில் கரைகள் பலப்பட்டுவது மட்டுமன்றி, இதன்மூலம் பல்வேறு வகையான மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் தயாரிப்பதற்கும் அடிப்படையாக திகழ்கிறது. இதன் பராமரிப்பு என்பது மிகக்குறைவு. பனைவிதைகள் நடவு செய்து ஓராண்டுகள் பராமரித்தாலே தொடர்ந்து தானாக வளர்ந்து பலனைத்தரக்கூடிய அளவிற்கு சிறப்புவாய்ந்த மரமாகத் திகழ்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்பு எல்லாக் கிராமப்பகுதிகளிலும் அதிக அளவு இருந்த பனைமரம் தற்பொழுது குறைந்துள்ளது. அதை மீண்டும் அதிக அளவு வளர்த்து வரும் இளைஞர் சமுதாயம் பாதுகாத்திடும் வகையில் இத்தகையத் திட்டத்தை அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுத்திட அரசால் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, தமிழகம் முழுவதும் 6 கோடி பனை விதைகள் நடும் திட்டமானது, தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் 10 இலட்சம் பனை விதைகள் நடும் பணியானது, மாவட்டத்திலுள்ள 12 வட்டாரங்களுக்குட்பட்ட 445 கிராம ஊராட்சிகளிலும் இன்றையதினம் தொடங்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, வேட்டங்குடி பறவைகள் சரணாலய பகுதிகளில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு தன்னார்வலர்கள் அமைப்பு, இந்திய செஞ்சிலுவை சங்கம் ஆகியவைகள் இணைந்து நடத்தும் மாபெரும் பனை விதைகள் நடும் திட்ட துவக்க விழாவானது சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் உமையாள் இராமநாதன் மகளிர் கலைக்கல்லூரி மற்றும் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கலைக்கல்லூரி, அழகப்பா பள்ளி குழுமம், அழகப்பா நர்சிங் கல்லூரி, பூலாங்குறிச்சி விஎஸ்எஸ் அரசு கலைக்கல்லூரி ஆகியவைகளைச் சார்ந்த மாணவ மாணவியர்கள், இளம் செஞ்சிலுவை சங்கம் மற்றும் நாட்டு நலப்பணிகள் திட்ட மாணவ மாணவியர்கள் மற்றும் மேற்கண்ட துறை சார்ந்த அலுவலர்கள், தன்னார்வலர்கள் என 200க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

நாட்டின் எதிர்கால சந்ததியினர்களான மாணாக்கர்களாகிய நீங்கள் தான் இயற்கை வளத்தினை பாதுகாத்திடல் வேண்டும். அதுவே, உங்களது தலையாய கடமையாகும். எனவே, இயற்கை வளங்களை பேணி பாதுகாத்து பராமரித்திட வேண்டும் என்ற அடிப்படையில் தங்களிடையே ஆர்வத்தினை ஏற்படுத்திடும் பொருட்டு, பனைவிதைகள் நடும் பணியில் தங்களின் ஆர்வத்தின் அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நமது மாவட்டத்தில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இன்றையதினம் நடப்பட்டு வரும் பனை விதைகள் நடும் பணியானது, இன்று மற்றும் நாளை என இரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது. அந்தந்த பகுதிகளில் நடப்பட்டு வரும் பனை மர நாற்றுகளை அந்தந்த பகுதிகளுக்குட்பட்ட பொதுமக்கள் முறையாக பேணிக்காத்து சிவகங்கை மாவட்டத்தினை பசுமையான மாவட் டமாகவும் இயற்கை வளத் தினை மேம்படுத்துவதற்கும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், மாவட்ட வன அலுவலர் (பொ) திரு.ரேவதி ராமன்,இ.வ.ப.,, அவர்கள், உதவி வன பாதுகாவலர் திரு.மலர் கண்ணன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை, பசுமை தோழர் திரு.ஆனந்த் நாகராஜ், இந்திய செஞ்சிலுவை சங்கதலைவர் திரு.சுந்தர்ராஜன், உமையாள் இராமநாதன் மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.முனிராஜ், வட்டாட்சியர் திரு.நாகநாதன் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# திருமலாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 18.10.2025 அன்று நடைபெற உள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்




தென்காசி, அக்.15-

தென்காசி மாவட்டத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலம் மேலநீலிதநல்லூர் வட்டாரம், வடக்கு பனவடலி ஊராட்சி, திருமலாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் வைத்து நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 18.10.2025 (சனிக்கிழமை) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல், மகப்பேறு மற்றும் மகளிர் நலம், குழந்தைகள் நலம், இருதயவியல், நரம்பியல், தோல்,, பல், கண், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை, நுரையீரல் மற்றும் இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்து வகையிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை போன்ற அனைத்து சேவைகளும் தகுதியுள்ளவர்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொது மக்கள் அனைவரும் முகாமிற்கு வருகை தந்து மருத்துவப் பரிசோதனை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

# வேலைநாடும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில், வருகின்ற 17.10.2025 அன்று, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, அக்.15-

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் இரண்டாம் அல்லது மூன்றாம் வெள்ளிக்கிழமையன்று சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. அதன்படி, வருகின்ற 17.10.2025 (வெள்ளிக் கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில், வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்து கொள்ளலாம். சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

மேலும், இம்முகாமில் இலவச திறன் பயிற்சிக்கான விண்ணப்பபடிவம், போட்டித் தேர்வுகளுக்கான இலவசப்பயிற்சி வகுப்பில் மாணவர் சேர்க்கை, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்ப படிவம் ஆகியவையும் வழங்கப்படும். எனவே, விருப்பமுள்ளவர்கள் பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை மற்றும் ஐ.டி.ஐ, டிப்ளமோ படித்த இளைஞர்கள் தங்களது கல்விச்சான்று, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு அடையாள அட்டை, ஆதார் அட்டையுடன் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இம்முகாமில் பணிவாய்ப்பு பெறுவோருக்கு பதிவு மூப்பு ஏதும் ரத்து செய்யப்படமாட்டது. எனவே வேலைநாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

## சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குறிப்பிட்ட பகுதிகளுக்கான“உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானது,

# (15.10.2025) கொத்தமங்கலம் ஊராட்சியில் அமைந்துள்ள வி.பி.ஆர். திருமண மஹாலில் நடைபெறவுள்ளது: மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, அக்.15-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள ''உங்களுடன் ஸ்டாலின்'' சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள ''உங்களுடன் ஸ்டாலின்'' திட்ட முகாமினை தொடர்ந்து, நாளையதினம் (அக்டோபர் 15) சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொத்தமங்கலம், வடகுடி மற்றும் செட்டிநாடு ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென கொத்தமங்கலம் ஊராட்சியில் அமைந்துள்ள வி.பி.ஆர் திருமண மஹாலில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், ''உங்களுடன் ஸ்டாலின்'' முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி நிலவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதி சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.




# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, அக்.15-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கடந்த 15.07.2025 அன்று துவக்கி வைத்ததைத்தொடர்ந்து, இன்று (14.10.2025) கன்னியாகுமரி மாவட்டம் திங்கள்நகர் பேரூராட்சிக்குட்பட்ட திங்கள் நகர் குமார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் துவக்கி வைத்து நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற அற்புதமான திட்டத்தினை செயல்படுத்தினார்கள். இத்திட்டம் அக்டோபர் மாதம் 30ம் தேதி வரை நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்று கல்குளம் வட்டம் திங்கள்நகர் பேரூராட்சிக்குட்பட்ட 1 முதல் 8 வார்டு பொதுமக்களுக்கு திங்கள்நகர் குமார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை நேரில் பார்வையிட்டு, பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அவர்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தகுதியானவர்களுக்கு உடனடியாக ஆணைகள் வழங்கிட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 15.07.2025 முதல் 10.10.2025 வரை 281 முகாம்கள் நடத்தப்பட்டு 1,41,249 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இன்று நடைபெற்ற முகாமில் வேளாண்மை துறையின் சார்பில் வேளாண் இடுபொருள் மற்றும் காய்கறி விதைத்தொகுப்பு வேண்டி விண்ணப்பித்த விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.

# தேவனாம்பட்டினம் வெள்ளிக் கடற்கரை நீலக்கொடி சான்றிதழ் பெறும் முயற்சிக்கான பணிகள் மற்றும் புனித டேவிட் கோட்டையில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆய்வு



கடலூர், அக்.15-

கடலூர், தேவனாம் பட்டினம் வெள்ளிக் கடற்கரை நீலக்கொடி சான்றிதழ் பெறும் முயற்சிக்கான பணிகள், துறைமுக அலுவலர் மற்றும் மருத்துவ அலுவலர் பராம்பரிய கட்டடம் மற்றும் புனித டேவிட் கோட்டை புனரமைப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்ததாவது,

கடலூர் மாநகராட்சிப் பகுதிகளில் பராம்பரிய கட்டடங்களாக புனித டேவிட் கோட்டை, துறைமுக அலுவலர் பராம் பரியக் கட்டடம், மருத்துவ அலுவலர் பராம்பரிய கட்டடம் ஆகியவை வெள்ளிக் கடற்கரைக்கு அருகாமையிலேயே அமைந்துள்ளது. துறைமுக அலுவலர் கட்டடம் ரூ.4.90 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் மருத்துவ அலுவலர் கட்டடம் ரூ.5.25 கோடி மதிப்பீட்டிலும் பழமை மாறாமல் புனரமைப்பதற்கு அரசாணை பெறப்பட்டுள்ளது. ஒரு மாத காலத்தில் அதற்கான கட்டுமானப் பணிகள் துவங்கப்படவுள்ளது. புனித டேவிட் கோட்டை புனரமைப்பு செய்வதற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

வெள்ளிக் கடற்கரையில் நெய்தல் பூங்கா, பெயர் பலகைகள், சாலை தடுப்புகள், நவீன கழிப்பறைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.4.98 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நீலக்கொடி சான்றிதழ் பெறும் முயற்சிக்காக அழகிய நடைபாதைகள், பூங்கா, கடற்கரையில் ஓய்வெடுக்கும் பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் ரூ.4 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெள்ளிக் கடற்கரை பகுதியில் உள்ள அனைத்து பராம்பரிய கட்டடங்கள், புனரமைப்பு பணிகள் மற்றும் வெள்ளிக் கடற்கரை மேம்படுத்தும் பணிகள் முடிவுறும் பட்சத்தில் இப்பகுதி ஒரு மிகச்சிறந்த சுற்றுளா தளமாக அமையும். மேலும், இதன் மூலம் வரலாற்று தொன்மையினை பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், சுற்றுலா தளமாகவும் உருவாக்குவதன் மூலம் உள்ளூர் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்புடன் பொருளாதார வாய்ப்புகளும் கிடைக்கும்.

கடலூர் கஸ்டம்ஸ் சாலை 15 கி.மீ நீளத்திற்கு வெளிவட்ட சாலையாக அமைந்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒருவழி பாதையாக உள்ள கஸ்டம்ஸ் சாலையினை நெடுஞ்சாலைத் துறை மூலம் இருவழி பாதையாக அமைக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, முதற்கட்ட பணிகளாக இச்சாலையினை கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோண்டூர் மற்றும் நத்தப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் 1.5 கி.மீ கஸ்டம்ஸ் சாலை பகுதியில் மாபெரும் தூய்மை பணிகளாக ஜேசிபி இயந்திரங்கள் உதவியுடன் தூய்மை பணியாளர்களைக் கொண்டு பொதுமக்களுக்கு எவ்வித சுகாதார சீர்கேடும் ஏற்படாத வண்ணம் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளது. இப்பகுதியிலிருந்து அகற்றப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை முறையான மறுசுழற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளது

மேலும், இப்பகுதியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. இப்பகுதியில் குப்பை கொட்டுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. மீறி குப்பைகளை கொட்டினால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 இன் படி அபராதம் விதித்தல் உள்ளிட்ட சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

ஆய்வின் போது ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ர.அ.பிரியங்கா இ.ஆ.ப., பயிற்சி ஆட்சியர் மாலதி இ.ஆ.ப., உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஷபானா அஞ்சும், மாநகராட்சி ஆணையாளர் முஜிபூர் ரஹ்மான் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 118வது பிறந்த நாள் விழா மற்றும் 63வது குருபூஜை விழாவையொட்டி, மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜி.சந்தீஷ்,இ.கா.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.திவ்யான்ஷீநிகம்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர்



# விஜய் பிரச்சார கூட்டத்தில் உயிரிழந்த 41 பேருக்கு 16ம் நாள் காரியம் செய்த தவெகவினர்

திருச்சி, அக்.15-

திருச்சி மாவட்டம் துறையூர் சட்டப்பேரவைத் தொகுதி தவெகவினர், கரூரில் உயிரிழந்த 41 பேரின் ஆத்மா சாந்தியடைய 16ம் நாள் காரியம் செய்தனர். இதையொட்டி, துறையூர் விசாலாட்சி உடனுறை காசி விஸ்வநாதர் கோயில் முன்பு புரோகிதர் மூலம் வேத மந்திரங்களுடன் பூஜைகள் செய்யப்பட்டன.

யாகம் வளர்க்கப்பட்டு, அதில் வைத்திருந்த தர்ப்பை புற்கள், கல் ஆகியன கோயில் குளத்தில் விடப்பட்டன. மேலும், பிதுர்லோகத்தில் இருப்பவர்களுக்கு கவளப்பிண்டம் வைத்து பூஜிக்கப்பட்டு, அவை கோயில் குளத்தில் கரைக்கப்பட்டன. இந்நிகழ்வில், தவெக திருச்சி வடக்கு மாவட்ட இணைச் செயலாளர் மதன், துறையூர் தொகுதி பொறுப்பாளர்கள் கவியரசன், சதா, துறையூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் சுதாகர், கிழக்கு ஒன்றியச் செயலாளர் தர்மா உட்பட பலர் பங்கேற்றனர்.



பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் சிவகங்கை மாவட்ட வருவாய் அளவிலான

# குடியரசுதின தடகள போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி கொடியசைத்து துவக்கி வைத்தார்

சிவகங்கை, அக்.15-

சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், சிவகங்கை மாவட்ட வருவாய் அளவிலான குடியரசுதின தடகள போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, மாணாக்கர்கள் பயன்பெற்று வருகின்றனர். மாணாக்கர்கள் கல்வியில் சிறந்து விளங்குவது மட்டுமன்றி விளையாட்டிலும் சிறந்து விளங்கிட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, அவர்களின் ஆர்வத்திற்கேற்ற விளையாட்டினை தேர்ந்தெடுத்து, அதில் சாதித்து காட்டும் வகையில் சிறப்பான நடவடிக்கைகள் துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில், வருவாய் மாவட்ட அளவிலான குடியரசுதின தடகள போட்டிகள் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், 2025 2026 ஆம் ஆண்டிற்கான சிவகங்கை வருவாய் மாவட்ட அளவிலான குடியரசுதின தடகள போட்டிகள் இன்றையதினம் சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதில், 86 வகையான தடகள போட்டிகளில் 14, 17 மற்றும் 19 வயது என மேற்கண்ட பிரிவுகளில் சுமார் 1,000 மாணவ மாணவியர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் முதல் இரண்டு இடங்களை பெறும் மாணவ, மாணவியர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தேர்வாவர்கள். இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள மாவட்ட அளவிலான போட்டிகளில் 100 மீ, 200மீ, 400 மீ, 600மீ, 800மீ, 1,500மீ, 3,000மீ, நீளம் தாண்டுதல், மும்முறை தத்தித்தாவுதல், உயரம் தாண்டுதல், வட்டு எறிதல், குண்டு எறிதல், கனை உன்றி தாவுதல், 4 ஜ் 100 தொடர் ஓட்டம் , 4 ஜ் 400 தொடர் ஓட்டம், 80 மீ தடை தாண்டி ஓட்டம், 100 மீ தடை தாண்டி ஓட்டம், 110 மீ தடை தாண்டி ஓட்டம் என பல்வேறு பிரிவுகளில் போட்டிகளானது மாணவ, மாணவியர்கள் இருவருக்கும் நடைபெறவுள்ளது.

மேலும், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி, தோல்விகள் என்பதை கருத்தில் கொள்ளாமல், முதலில் நாம் அதில் பங்கு கொள்வதை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் பல்வேறு போட்டிகளில் பங்கு கொள்வதன் அடிப்படையில், தங்களது திறன்களை வெளிக்கொணருவதற்கு அவை வாய்ப்பாக அமையும். இதனை மாணாக்கர்கள் கருத்தில் கொண்டு தங்களுக்கு விருப்பமான விளையாட்டுப் போட்டிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அதில் வெற்றி பெற்று, அதன்மூலம் தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திரு.மாரிமுத்து, மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) திரு.இராஜேந்திரன், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் திரு.கார்த்திக்கேயன் மற்றும் மாணவ மாணவியர்கள், ஆசிரியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஆரல்வாய்மொழி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா கலந்துரையாடல்

கன்னியாகுமரி, அக்.15-

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவர்களின் கற்றல் திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா மாணவ மாணவியர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடி தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்ட மாணவ மாணவர்களின் கல்வி அடைவினை மேம்படுத்துவதற்காக பல்வேறு முன்னெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்று ஆரல்வாய்மொழி அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களிடம் கலந்துரையாடி, அவர்களின் எதிர்கால குறிக்கோள்கள் குறித்து கேட்டறியப்பட்டது. தொடர்ந்து மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் குறித்து ஆசியர்களிடம் கேட்டறியப்பட்டது. மாணவர்களிடம் பாடங்களில் ஏற்படும் ஐயங்களை உடனுக்குடன் ஆசிரியர்களை அணுகி நிவர்த்தி செய்து விட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.



ஆரல்வாய்மொழி பள்ளி ஆனது வளமிகு வட்டாரத்தை சார்ந்த பள்ளி என்பதால் மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்ற பயிற்சிகள் மற்றும் மாணவர்களின் அடைவுநிலை சார்ந்த விவரங்கள் மீளாய்வு செய்யப்பட்டது. மேலும் மாணவர்களுடன் கலந்துரையாடி, கற்றலுக்கு இடையூறாக காணப்படும் காரணிகள் கேட்டறியப்பட்டது. வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு மாணவர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, தங்களது திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். எனவே திறன் வளர்த்தலில் முக்கிய கவனம் செலுத்தி திறன்மிக்க மாணவர்களாய் வெளிவர தங்களது முழு நேரத்தையும் செலவிட வேண்டுமென மாணவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. நாட்டின் முக்கிய மூலதனமான படிப்பை, மாணவர்கள் தங்களது முழு நேர பணியாக கொண்டு செயல்பட வேண்டும். பள்ளிகளில் வழங்கப்படுகிற உயர்கல்வி சார்ந்த வழிகாட்டுதல்களை முழுமையாக உள்வாங்கிக்கொண்டு, அதற்கு ஏற்றார்போல் சிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறுவதற்கு மாணவர்கள் தயாராக வேண்டும். வாழ்க்கையில் முன்னேற படிப்பு முக்கியமானதால், எப்போதெல்லாம் தோன்றுகிறதோ அப்போதெல்லாம் படித்துக் கொண்டிருக்க முயற்சிக்க வேண்டும். மாணவர்கள் தேவையில்லாமல் பள்ளிக்கு வருகை புரியாமல் இருப்பதை தவிர்த்திடல் வேண்டும். மாணவர்கள் பள்ளிக்கு வருகையில் எவ்வித சுணக்கமும் இன்றி 100% வருகை புரிதலை உறுதி செய்து கொள்ள வேண்டும். மாணவர்கள் வருகை புரிதலை ஆசிரியர்களும் தலைமை ஆசிரியரும் தொடர்ந்து கண்காணித்திடல் வேண்டும். ஆற்றுப்படுத்துதல் தேவைப்படும் மாணவர்களுக்கு உரிய வழிமுறைகள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செய்து தர இருப்பதால் தேவைப்படும் மாணவர்கள் சார்ந்த விவரங்களை தெரிவித்திட தலைமையாசிரிடம் அறிவுறுத்தப்பட்டது. இரண்டாம் பருவத்திற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் மாணவர்கள் குறுகிய கால பயிற்சியை மட்டுமே பெற இருப்பதால் அதனை கருத்தில் கொண்டு சிறப்பாக படிக்க வேண்டும். அனைத்து மாணவர்களையும் தேர்ச்சி பெற செய்யும் நோக்கில் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் முழுமூச்சாக செயல்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி செஞ்சை புனித குழந்தை தெரசாள் ஆலயத்தில் ஆயர் லூர்து ஆனந்தம் அவர்களுக்கு வரவேற்பு அளித்து பின்னர் திருவிழா திருப்பலி வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. சிறப்பு திருவிழா திருப்பலியை மேதகு சிவகங்கை மறை மாவட்ட ஆயர் லூர்து ஆனந்தம் தலைமையிலும், மற்றும் செஞ்சை பங்குத்தந்தை கிளமெண்ட் ராசா முன்னிலையிலும், இன்னும் பிற அருள் தந்தையர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கொண்டாடினார்கள். ஏராளமான இறை மக்கள் இதில் கலந்து கொண்டனர். திருப்பலிக்குப்பின் குழந்தை தெரசாள் புதிய தேர், மற்றும் ஆரோக்கிய மாதா தேர் பவனி காரைக்குடி நகர முக்கிய வீதிகளில் வலம் வந்தது. இறுதியில் நற்கருணை ஆசீருடன் திருவிழா நிறைவு பெற்றது. திருவிழா ஏற்பாட்டை பங்குத்தந்தை பங்கு பேரவை, பக்த சபைகள் இணைந்து செயல்பட்டனர். பங்குப் பேரவை செயலர் ஜெரால்டின் தாமஸ் அவர்கள் நன்றி கூறினார்கள்.





# தஞ்சாவூர் கலைப்புயல் சிலம்பாட்டப் பயிற்சிப்பள்ளியின் ஐந்தாம் ஆண்டு விருது வழங்கும் விழா அறிஞர் அண்ணா நூற்றாண்டு அரங்கில் நடைபெற்றது

தஞ்சாவூர், அக்.15-

கலைமாமணி தாராபுரம் கலாராணி, பொதுக்குழு செயற்குழு உறுப்பினர் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம். தஞ்சாவூர் திவாஸ். ரோட்டரி கிளப் ஆப் தலைவர் அனிதா அருணா பாஸ்கர். சிலம்பாட்ட பயிற்சிப்பள்ளி ஆசான், கலைவளர்மணி துளசி ராமன். கலைமாமணி வீரசங்கர்.

தஞ்சாவூர் கூடைப்பந்து கழக தலைவர் ராஜ் குமார் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிலம்ப கலைச்சுடர் விருது கோப்பைகளும், சான்றிதழ்களும் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் சிலம்பாட்ட, நாட்டுப்புற கலைஞர்கள், மாணவர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# சிவகங்கையில் வானவில் மன்ற மீளாய்வுக் கூட்டம்

சிவகங்கை, அக்.15-

சிவகங்கை மருது பாண்டியர் நகர் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறையின் கூட்டரங்கில் செப்டம்பர் 2025 வேலை அறிக்கை சமர்ப்பிக்கும் மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது. வானவில் மன்ற கருத்தாளர் புவியரசி வரவேற்றார். சிவகங்கை மாவட்டக் கல்வி அலுவலர் வடிவேல் தலைமை வகித்தார். ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை மாவட்ட உதவித் திட்ட அலுவலர் பீட்டர் லெமாயூ முன்னிலை வகித்தார். பள்ளிக் கல்வித்துறை மாவட்ட ஒருங்கிணைப் பாளர் சகாய பிரிட்டோ நோக்கவுரையாற்றினார். அமைப்புசார் வானவில் மன்ற ஒருங்கிணைப்பாளர் மாலா பயிற்சியை ஒருங்கிணைப்பு செய்து முக்கிய தகவல்களைக் கூறினார். முதன்மை கருத்தாளர் இணை ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி வானவில் மன்ற கருத்தாளர்களின் கடமைகள் குறித்தும் துளிர் திறனறிதல் தேர்வு குறித்தும் குழந்தை விஞ்ஞானிகள் ஆய்வுக்கட்டுரைகள் சமர்பிப்பது குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.







நவம்பர் 15 ஆம் தேதி நடைபெறக்கூடிய துளிர் திறனறிதல் தேர்வுக்கான பிரசுரங்கள் பதாகைகள் வழங்கப்பட்டன. வேலை அறிக்கை முன் பயண அட்டவணை மற்றும் வேலை அறிக்கை தொகுப்பு போன்ற படிவங்கள் ஒப்படைக்கப்பட்டது. வெப்ப உமிழ் வினை வெப்ப கொள்வினை பெர்னூலியின் தத்துவம் நீரின் விசை முழுக்கள் இயல் எண்கள் தாவர உலகம் குறித்த அறிவியல் மற்றும் கணித செய்முறை பயிற்சி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க பொறுப்பாளர் தமிழ்செல்வம் வாழ்த்துரை வழங்கினார். வானவில் கருத்தாளர் ஜெயபிரியா நன்றி கூறினார்.

# மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

மதுரை, அக்.15-

மதுரை மாவட்டம், கிழக்கு ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள் ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மதுரை மாவட்டம் ஒருங்கிணைந்த ஒப்படை க்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் தலா ரூபாய் 5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் மதுரை மேற்கு மற்றும் மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடம் கட்டும் பணியினை ஆய்வு செய்து பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடிப்பதற்கு பொறியாளர்களுக்கு அறிவுத்தினார்.

இந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தில் தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளம் கொண்ட கட்டமாக கட்டப்படவுள்ளது. தரைத்தளமானது வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், ஒன்றியக் குழுத் தலைவர் அலுவலகம், மன்றக் கூட்ட அரங்கம் மற்றும் தேர்தல் பிரிவு கொண்ட தளமாகவும், முதல் தளமானது வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், பொறியியல் பிரிவு மற்றும் கோப்புகள் பராமரிக்கப்படும் பிரிவு கொண்ட தளமாகவும், இரண்டாம் தளமானது காணொளி காட்சி கூட்ட அரங்கு கொண்ட தளம ாகவும் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்து மதுரை வடக்கு வட்டம், கடச்ச னேந்தல் பகுதியில் தமிழக அரசின் பங்களிப்போடு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை கீழ் செயல்படும் ஜோ அந்திரியா பள்ளி மற்றும் விடுதியை ஆய்வு செய்து கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள், வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை எண்ணறிவு திறன்கள் குறித்து ஆய்வு செய்து மாணவமாணவிகளுடன் கலந்துரையாடினார். மேலும் விடுதியை ஆய்வு செய்து மாணவ, மாணவிகளுக்கு வழங்க ப்படும் உணவின் தரம் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும் ஒத்தக்கடை ஊராட்சி, நீலமேகம் தெருவில் நமக்கு நாமே திட்டம் மூலம் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நூலக கட்டிடப் பணிகளையும், நூலகத்திற்கு சுற்றுச் சுவர் அமைப்பதற்கான பணியினை விரைந்து மேற்கொள்ள அலுவலர் களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, ஒத்தக்கடையில் கிளை நூலகத்தை பார்வையிட்டு வாசகர்கள் வருகை குறித்தும், நூலகத்தில் உள்ள போட்டி தேர்விற்கான நூல்கள் குறித்தும் ஆய்வு செய்து நூலகத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

மேலும் கொடிக்குளம் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் அடிப்படை கற்றல் திறன்கள் குறித்து ஆய்வு செய்தார். ஒத்தக்கடை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள காய்ச்சல் வார்டு, பதிவு செய்யும் இடம், உள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவு, உள்ளிட்ட இடங்களை பார்வையிட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். பின்னர் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், தாமரைப்பட்டி ஊராட்சி, காயம்பட்டிமேடு கிராமத்தில் ரூபாய் 3.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடப்பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மதுரை கிழக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ஜோதிராஜ் அவர்கள், திரு.கதிரவன் அவர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கண்ணன் அவர்கள், பொறியாளர்கள் முத்துலெட்சுமி திரு.சுரேஷ் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.







■ சிவகங்கை RMR மஹாலில் சிவம் மார்சியல் ஆர்ட்ஸ் சார்பாக மாஸ்டர் எம் பரமசிவம் அவர்களால் புஸ்ஸப் காம்படிஷன் மாணவ மாணவியர்களுக்கு இடையில் போட்டி நடைபெற்றது இப்போட்டியில் சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவர் மாணவிகள் கலந்து கொண்டனர் போட்டியை மதுரையைச் சேர்ந்த கராத்தே மாஸ்டர் சென்சாய் ராஜசேகரன் அவர்களின் தலைமையேற்று போட்டி நடைபெற்றது இப்போட்டியை சிவகங்கை மதுரை சேர்ந்த நடுவர் பெருமக்கள் கலந்து கொண்டு போட்டியின் விதிமுறைப்படி நடத்தி முடித்தனர் முதல் பரிசு இரண்டாம் பரிசு மூன்றாம் பரிசு வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் மாஸ்டர் எம் பரமசிவம் வழங்கினார்.





முடிச்சூரில் தீபாவளி பண்டிகை முன்னிட்டு ஆதரவற்ற முதியோர்களுக்கு 2வது ஆண்டாக

# ஒ.பி.ஆர். நினைவு தொண்டு அறக்கட்டளை சார்பில் புத்தாடை இனிப்புகள் மற்றும் காரவகைகள் வழங்கப்பட்டது

முடிச்சூர், அக்.15-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த முடிச்சூரில் உள்ள ஆதரவற்ற முதியோர்கள் இல்லத்தில் வசித்து வரும் முதியோர்களுக்கு முன்னாள் முதல்வர் ஓ.பி.ஆர். நினைவு தொண்டு அறக்கட்டளை சார்பில் தீபாவளியை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

முதியோர் இல்லத்தில் தங்கி உள்ள 80 முதியோர்களும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியாக கொண்டாடும் வகையில், அவர்களுக்கு புத்தாடை, இனிப்பு மற்றும் அறுசுவை உணவுகளை ஒ.பி.ஆர். நினைவு தொண்டு அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டது.

ஒ.பி.ஆர். அறக்கட்டளை சார்பில் அறக்கட்டளை அதன் நிறுவனர் டாக்டர் வீ.செல்வராஜ், அறங்காவலர்கள் வீ.ஜெயகுமார், பி.தாமோதரன், டாக்டர் ஜெ.அருண்குமார், ஆர்.ராமேஷ்குமார், ரெட்டி இளைஞர் பேரவை நிர்வாகிகள் பி.அருண்குமார், ஆர்.ரவிசந்திரன், டி.லோகநாதன், டாக்டர் கே.பிச்சிமணி மற்றும் ரெட்டி மகளிர் அமைப்பு நிர்வாகிகள், அனிதாஅருண்குமார், அனிதா ரஞ்ஜித், தீபா, சுகன்யா மற்றும் சமூக சேவகி அமிர்தா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருநீர்மலை பகுதியில் புதிதாக கட்டப்பட்ட குடியிருப்புகளை திருநீர்மலை கோவில் அர்ச்சகர்கள் பணியாளர்களுக்கு பயன்பாட்டிற்கு வழங்கினார்

தாம்பரம், அக்.15-

செங்கல்பட்டு மாவட்டம் திருநீர்மலை பகுதியில் புதிதாக கட்டப்பட்ட குடியிரு ப்புகளை திருநீர்மலை கோவில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயன் பாட்டிற்கு வழங்கினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருநீர்மலை அருள்மிகு ரங்கநாத பெருமாள் திருக்கோயில் அர்ச்சகர் மற்றும் பணியாளர்களுக்கு ரூபாய் ஒரு கோடியே 90 லட்சம் செலவில் குடியிருப்புகள் கட்டப்பட்டு தமிழக முதலமைச்சரால் சென்னை தலைமை செயலகத்தில் இருந்து துவங்கி வைத்தார்...





அதன் ஒரு பகுதியாக திருநீர்மலை குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற விழாவில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்து புதிய குடியிருப்புகளை பார்வை யிட்டார். இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், பகுதி கழகச் செயலாளர் தா.ஜெயக்குமார் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



# ஊசூர் அடுத்த குருமலையில், பள்ளி மாணவ மாணவிகளுடன் விதைப்பந்து தூவும் நிகழ்ச்சி

வேலூர், அக்.15-

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், அணைக்கட்டு தாலுகா, அத்தியூர் ஊராட்சி குருமலை மலைக்கிராம பகுதியில் விதைப்பந்து தூவும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி விதைப்பந்துகள் தூவும் பணியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் வேலூர் ஒன்றிய குழு தலைவர் அமுதா ஞானசேகரன், ஒன்றிய குழு துணை தலைவர் மகேஸ்வரி காசி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் பாபு, வட்டாட்சியர் சுகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர் வின்செண்ட் ரமேஷ்பாபு, துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் சமூக அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161